sns academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

**தமிழ் பயிற்சித்தாள்-1**

பெயர் : ____________________

வகுப்பு : **ஆறு** தேதி : 20.6.19

**I.பத்தியைப் படித்து விடையளி:**

உலகில் அழியாத செல்வம் கல்வி. கல்வியைப் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கப் பெருகும். கல்வியைக் கற்பதோடு அல்லாமல் அதை வாழ்வில் பின்பற்ற வேண்டும்.'கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்று மூதுரை கூறுகிறது.'பிச்சை எடுக்க நேரிட்டாலும் கல்வி கற்பது நன்மையையே அளிக்கும்'என்று நறுந்தொகை கூறுகிறது.

**வினாக்கள்:**

1. உலகில் அழியாத செல்வம் எது ?

2. 'கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்று ________

கூறுகிறது.

3. 'பிச்சை எடுக்க நேரிட்டாலும் கல்வி நன்மையையே __________

4. பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கப் பெருகுவது _______________

5.கல்வி கற்ற பிறகு வாழ்வில் என்ன செய்ய வேண்டும்?

**II.பத்தியைப் படித்து விடையளி** (5x1=5)

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஒழுகினசேரியில் 1908 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் நாள் சுடலைமுத்து - இசக்கியம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவரே பார் போற்றும் கலைவாணர் என்.எஸ் கிருஷ்ணன். 'வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்','சிரிக்கத் தெரிந்தவன் மனிதன் மட்டுமேஎன்று எப்போதும் கூறுவார். இவருக்கு நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களிடம் இருந்து கலைவாணர் என்ற பட்டம் வழங்கப்பட்டது.இவர் தனக்குத்தானே 'நாகரிகக் கோமாளி'என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டார்.

**வினாக்கள்:**

1. வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் ____________

2. என்.எஸ் கிருஷ்ணன் அவர்களின் பெற்றோர் - _______________

3. நாடகப் பேராசிரியர் என அழைக்கப்படுபவர்

--------------------------------

4. என்.எஸ் கிருஷ்ணன் அவர்களின் ஊர் ___________________

5. என்.எஸ் கிருஷ்ணன் தனக்குத்தானே '_________________என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார்.

III. **சொல்லில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்திப் பொருள் தரும் புதிய சொற்களை எழுதுக:**

1. மலைச்சாரல் - _________________ , ____________________

2. பூங்காவனம் - __________________ , _____________________

3. சிட்டுக்குருவி - __________________ , ____________________

**IV. வாக்கியம் அமைக்க:**

1. மழைத்துளி -

2. ஒற்றுமை -

**V. எழுத்துகளை அறிந்து எழுதுக:**

1. செடி வளர்ந்து ____________ ஆனது. (மரம் /மறம்)

2. ________________ யில் கதவு உள்ளது ( அறை / அரை )

VI.**பின்வரும் படத்தைப் பார்த்து அதைப்பற்றி 5 வரிகள் எழுதுக.**

